நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**<u>சி.சி.எண். 47/2018</u>**

2021ம்ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : | **அரவிந்பாலாஜி** | **வயது** | : 25 |
| **த/பெ.** | : | **ரவிசந்திரன்** | **தொழில்** | : |
| **ஊர்** | : | **சேலம** | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **சேலம** | **சாதி** | : |
| **மாவட்டம்** | : | **சேலம** | | |

முதல்விசாரணை:-

நான் சேலத்தில் குடியிருந்து வருகிறேன். பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தில் ஆராய்ச்சி பணியில் உள்ளேன்.நான் 2017ம்ஆண்டு டெல்லியிலுள்ள தனியார் நிறுவனத்தில் ஐஇடி தேர்விற்காக படித்து வந்தேன்.அப்போது 6.11.2017ம்தேதி கேரளா எக்ஸ்பிரஸ் விரைவு ரயில் தடம் எண். 12625 ரயிலில் சேலத்திலிருந்து டெல்லி செல்வதற்காக இரவு 11.30மணிக்கு சேலத்தில் ஏறினேன். நான் என்னுடைய ஆப்பிள் ஐ போன் 5 எஸ் மொபைலை சார்ஜ் செய்வதற்காக ரயிலில் எனது இருக்கைக்கு அருகில் இருந்த சார்ஜ்ங் பாய்ண்ட்டில் போட்டு வைத்திருந்தேன். ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக உள்ள சிக்னலில் ரயில் நின்றது.அப்போது நான் தூங்கிக்கொண்டிருந்தேன். ஒரு நபர் என்னுடைய செல்போனை அதன் ஒயர் உடன் பிடித்து இழுத்தார். அப்போது அந்த ஒயர் என் முகத்தில் பட்டு நான் கண் விழித்தேன். அப்போது அந்த நபரின் முகத்தை நான் பார்த்தேன். எனக்கு அவர் முகம் நினைவில் உள்ளது. ஆஜர் எதிரி தான் எனது மொபைல் போனை பறித்து சென்ற நபர் ஆவார். அப்போது நள்ளிரவு 01.20 மணி இருக்கும்.அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். அதனால் நான் நானே எழுந்து நடந்து வந்து பார்த்தேன். கீழே இறங்கினேன்.அப்போது அந்த நபர் அங்கு இல்லை.நான் அருகில் இருந்தவரிடம் இது குறித்து சொன்னேன். ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக தான் ரயில் நிற்கிறது. ரயில் பிளாட்பாரம் சென்றதும் நீங்கள் அங்கு சென்று உரிய நடவடிக்கையை எடுங்கள் என்று சொன்னார். அதன் படி

ரயில் பிளாட்பாரத்தில் நின்றது.நான் என்னுடைய உடமைகள் அனைத்தையும் ரயிலிருந்து இறக்கி வைத்து விட்டு அந்த நபர் இருக்கிறாரா என்று தேடிப்பார்த்தேன். ரயில் கிளம்பி சென்றுவிட்டது.ஆனால் அந்த நபரை என்னால் கண்டுபிடிக்கவில்லை. பிளாட்பாரத்தில் இருந்த ஒரு பயணச்சீட் பரிசோதகரிடம் இது குறித்து சொன்னேன். ரயில் நிலையத்திற்குள்ளேயே காவல் நிலையம் உள்ளது. அங்கு சென்று புகார் அளிக்குமாறு கூறினார். நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.அந்த மொபைல் போனில் என்னுடைய வங்கி கணக்குகள் உட்பட தனிப்பட்ட தகவல்கள் நிறைய இருந்தன.என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான்அளித்த புகார் ஆகும். அதிலுள்ள விபரங்கள் நான் என் கைப்பட எழுதி கையொப்பம் போட்டேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். அதன் பிறகு 21.01.2018ம்தேதி காலை 11.00 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்து என்னுடைய மொபைல் போன் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், வந்து அடையாளம் காட்டும்படி சொன்னார்கள்.அப்போது நான் சென்னையில் இருந்தேன். எனவே அன்று மாலை 05.00 மணிக்கு காவல்நிலையம் வந்துவிட்டேன். என்னுடைய போனை காண்பித்து அடையாளம் கேட்டார்கள். நான் என்னுடைய மொபைல் போன் தான் என்று அடையாளம் காட்டினேன். மேலும் ஆஜர் எதிரி காவல்நிலையத்திலிருந்தார். அவருடன் இன்னும் இரண்டு நபர்கள் இருந்தார்கள். நான் அந்த இரண்டு நபர்களை தெரியாது என கூறிவிட்டு ஆஜர் எதிரிதான் என்னிடமிருந்து மொபைல்போனை திருடினார் என்று அடையாளம் காட்டினேன்.போலீசார் மொபைல் போனை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்செல்லும்படி கூறினார்கள். அதன் படி நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள மொபைல்போன் நான் நீதிமன்றத்தில்மனு செய்து பெற்று சென்றது ஆகும்.புகைப்படம் அ.த.சா.ஆ.2 ஆகும் ( 2 வரிசை ). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

நான்தற்போது சாட்சியம் அளித்தது போல தான் அ.த.சா.ஆ.1 புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். காணாமல் போன மொபைலின் மாடலை கூறியுள்ளேனா என்று சொன்னால் கூறியுள்ளேன். ஆப்பிள் ஐ போன் 5 எஸ் ஆகும். மனு செய்து மொபைல் போனை வாங்கி செல்லும் போது நீதிமன்றம் கோரும் போது சாட்சியம் அளிக்கும் போது ஒப்படைக்கிறேன் என்று கூறி தான் வாங்கி சென்றுயுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு யாரும் என்னிடம் சொல்லவில்லை. சி.எம்.பி. எண். 862/2018 மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது என்று சொன்னால் சரிதான். தற்போது நீதிமன்றத்திற்கு மொபைல் போனை கொண்டு வந்தேனே் என்றால் கொண்டு வரவில்லை. மொபைல் போன் உபயோகம்படுத்தும் நிலையில் இல்லை. அதனால் கொண்டு வரவில்லை. வேண்டும் என்றால் நான் கோர்ட்டில் ஆஜர் செய்ய தயராக உள்ளேன்.எங்கு இருந்து

எங்கு செல்வதற்காக ரயிலில் ஏறினேன் என்றால் சேலத்திலிருந்து டெல்லி செல்வதற்கு சேலத்தில் வண்டி எண் 12625, கேரளா எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறினேன். நான் எந்த கோச்சில் பயணம் செய்தேன் என்றால் சீலிப்பர் கோச் எஸ். 8-ல் சீட் நெம்பர் 28ல் பயணம் செய்தேன். நான் பயணித்த இருக்கை ரயில் ஜன்னல் ஓரமாக இருக்கும் லோயர் பர்த் ஆகும். ரீசவ் கோச் என்பதினால் கதவு மூடிய நிலையில் இருக்கும் என்று சொன்னால் இல்லை திறந்த நிலையில் தான் இருந்தது. ரீசவ் கோச்சில் பாதுகாப்பிற்காக ரயில்வே பாதுகாப்பு காவலரும், பயணச்சீட்டு பரிசோதகரும் இருப்பார்கள் என்று சொன்னால் அந்த நேரத்தில் யாரும் இல்லை.ஒவ்வொரு கோச்க்கும் ஒரு பாதுகாப்பு காவலர் இருப்பார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. ரயிலில் உள்ள பாதுகாப்பு காவலரிடமோ, பயணச்சீட்டு பரிசோதகரிடமோ நான் புகார் கொடுத்தேனா என்றால் அவர்களை நான் பார்க்கவும் இல்லை. புகாரும் அளிக்கவில்லை. நான் எத்தனை மணிக்கு ரயிலில் ஏறினேன் என்றால் 11.30மணி ஏறினேன். நான் எத்தணை மணிக்கு ரயில்வே காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் நள்ளிரவு 02.30மணி இருக்கும்.

( எதிர்மனுதாரர் வேண்டுங்கோளிணங்க தற்போது குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )